# சுரானா & சுரானா மற்றும் வினாயகா மிஷன் சட்ட கல்லூரியும் இணைந்து வழங்கும்

# மாநில அளவிலான தமிழ் குடும்ப நல நீதி மன்றம்

# குடும்ப நல மற்றும் இணைய சட்டம் வழக்கு வாத முன் மொழிவு : 2025-26

---

**ஆய்வு பொருள்**

**நயன்தாரா**

**எதிர்**

**அத்வைத் & ஷாம்பாலா மாநில அரசு**

**வழக்கின் சாராம்சம் (Proposition)**

நயன்தாரா என்பவர் 1995 ஆம் ஆண்டு ஷாம்பாலா மாநிலத்தில் இருக்கும் பெரு நகரமான அர்க்கஷாவில் பிறந்தார். இவர் இளம் வயதில் இருந்தே தன்னுடைய கல்வியில் சிறந்து விளங்கி சமூகவியல் பாடத்தில் தங்கப்பதக்கம் பெற்றவர். தன்னுடைய எம்ஃபில் பட்டத்தை ஷாம்பாலா தேசிய பல்கலைக்கழகத்தில் பெற்றவர். கல்வியில் அவருக்கு இருந்த ஆர்வமும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அவர் படித்த அதே பல்கலைக்கழகத்தில் 2018 ஆம் ஆண்டு சமூகவியல் துறையில் உதவிப் பேராசிரியர் பணியை அவருக்குப் பெற்று தந்தது.

நயன்தாரா 2013 ஆம் ஆண்டில் முதுகலையில் படித்துக் கொண்டிருக்கும் போது, அப்பொழுது அங்கு கணிப்பொறிப் பயன்பாட்டுத் துறையில் முதுகலை படித்துக் கொண்டிருந்த அத்வைத் சர்மா என்பவரைச் சந்தித்தார்.

இருவருக்கும் இடையில் இருந்த கல்விசார் ஒத்திசைவானது அவர்களிடையே காதலாக வளர்ந்தது. பின்பு இது அவர்களது திருமணத்திற்கு இட்டுச் சென்றது.

அவர்களது திருமணம், 1976 ஆம் ஆண்டு ஷாம்பாலா சிறப்புத் திருமணச் சட்டத்தின் படி 2018 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் நாள் நடைபெற்றது. அவர்களது திருமணம் அர்க்கஷா நகரப் பதிவாளர் அலுவலகத்தில் நெருங்கிய குடும்ப உறவினர்களும் நெருக்கமான நண்பர்கள் மட்டும் கலந்து கொண்ட மிக எளிமையான திருமண விழாவாக நடைபெற்றது.

திருமணத்திற்குப் பின்பு அர்க்கஷா நகரில் இருக்கும் பிரபாத் காலனி என்ற வாடகைக் குடியிருப்பிற்குச் சென்று வசிக்கத் தொடங்கினார்கள்

தொடக்கத்தில் அவர்களது திருமண வாழ்க்கை இணக்கம் உடையதாகவே இருந்தது. நயன்தாரா தன்னுடைய வகுப்பறை வழியாகவும் ஆராய்ச்சி திட்டங்களில் வழியாகவும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களைக் கவர்ந்தார். அவரது விரிவுரையாளர் பணி தொடர்ந்து கொண்டிருந்தது. அத்வைதும் டெக் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவனத்தில் கணினிப் பொறியாளராகப் பணியாற்றிப் பணி மதிப்பீட்டு ஆய்வின் போதெல்லாம் குறிப்பிடத்தக்க ஊதிய உயர்வுகளைப் பெற்று வந்தார். அவர்களது சமூக ஊடகத் தோற்றமானது தங்கள் தொழிலையும் உறவுகளையும் சமநிலை படித்தி இலக்கினை எட்டுகிற ஆர்வமுடைய இந்தப் நூற்றாண்டில் ஒரு சிறந்த இணையராக வெளிப்படுத்தியது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அத்வைதின் தந்தையார் மாரடைப்பின் காரணமாகக் காலமானார். இந்த இழப்பானது அத்வைதின் தாயார் மீரா சர்மாவை ஆழமாகப் பாதித்தது. அவர் தன்னுடைய பிற்கால வாழ்க்கையை அவர்களுடன் கழிக்க ஆரம்பித்தார்.

2021 ஆம் ஆண்டு ஜூன் வாக்கில் அவர் இவர்கள் வாழ்ந்து வந்த குடியிருப்புக்கு நிரந்தரமாக வந்துவிட்டார். கோவிட் 19 காரணமாக ஏற்பட்ட ஊரடங்கு மற்றும் வீட்டில் இருந்து பணி புரியும் முறையானது குடும்ப உறவுகளின் நெருக்கத்தை அதிகப்படுத்தியதுடன் நயன்தாரா அத்வைதின் உறவில் விரிசல் ஏற்படவும் தொடங்கியது. நயன்தாரா தன் குடும்பக் கடமைகளைப் புறக்கணிக்கிறார் என்றும், கல்வி சார் கருத்தரங்குகளில் கலந்து

கொள்வதிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதிலும் மட்டுமே கவனம் செலுத்துகிறார் என்றும் நயன்தாரா மீது அத்வைத் குற்றம் சாட்டினார். நயன்தாரா துறைக் கூட்டங்களில் கலந்து கொண்டதன் காரணமாக வீட்டுக்கு அடிக்கடி தாமதமாக வரத் தொடங்கினார். இது குடும்பத்தில் பயன் எதுவமில்லாத மிகச்சிறிய பிரச்சினைகளிலும் பொறுப்புகளிலும் தேவையற்ற விவாதங்கள் எழுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது.

அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும் டிசம்பர் 2022 இல் நயன்தாரா கருவுற்று மார்ச் 2023 மாதத்தில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இவர்கள் இருவரும் குழந்தை ஆரியாவின் வருகையைக் கொண்டாடியதன் பொருட்டு அவர்களுக்கு இடையே தற்காலிகமான கருத்திணக்கம் ஏற்பட்டது.

எனினும், மூன்று மாதங்களுக்குள், ஆர்யாவை முழு நேரமாக கவனித்துக் கொள்வதற்காக நயன்தாரா தன்னுடைய ஆசிரியர் பணியை விட்டுவிட வேண்டும் என்று அத்வைத் வற்புறுத்தியதன் காரணமாக அவர்களுக்கிடையே முன்பு இருந்த முரண்பாடு மீண்டும் எழுந்தது. பணியின் மீது தனக்கு இருக்கிற பேரார்வத்தையும் தனக்கான அடையாளத்திற்குத் தேவையான நிதிச் சுதந்திரத்தையும் சுட்டிக்காட்டி அத்வைத் கூறியதை நயன்தாரா மறுத்துவிட்டார்.

அத்வைதின் அம்மாவும் நயன்தாரா மிகவும் சுயநலக்காரி, வேலைக்குச் செல்ல வேண்டும் என்று முரண்டு பிடிப்பவள், ஷாம்பாலா குடும்ப மரபிலான முறையில் ஒரு குழந்தையை வளர்ப்பதற்குத் தகுதியற்றவள் என்று சொல்லி அத்வைதின் கோரிக்கைகளைத் தானும் வலியுறுத்தினார்.

ஜூன் 2023 நயன்தாராவுக்கு அடையாளம் தெரியாத அலைபேசி அழைப்புகளும் செய்திகளும் வரத் தொடங்கியதிலிருந்து அவளுக்குப் பதட்டம் அதிகரித்தது. அவளது சமூக ஊடக்கணக்கின் பேரில் அமைந்த பகுதியில் ஆபாசமான படங்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து நயன்தாராவின்

நண்பர்கள் உடன் பணியாற்றுகிறவர்கள் தூரத்து உறவினர்கள் எனப் பலரும் அவளிடம் தொடர்பு கொண்டு தங்களுடைய கவலையைத் தெரிவித்தனர். “NayaRaoSecretLife” என்னும் பெயரில் ஒரு இன்ஸ்டாகிராமில் அரைகுறை நிர்வாணமான பெண்களின் படங்கள் வெளியிடப்பட்டிருந்தன. அவை ஒன்று கூட நயன்தாராவுடையது இல்லை. ஆனால் அவருடைய முழு பெயர் அதிலே இடப்பட்டிருந்தது. மேலும் அவரது பணியிடப் பதவியின் பெயர் மீது பழி சுமத்தும் குறிப்புகள் இடம்பெற்றுந்தன. இவை யாவும் அவர் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகவும், பலரோடு பாலியல் தொடர்புடையவர் என்பதையும் குறிப்பாக உணர்த்தின.. மேலும் புலன வழியாக நடத்தப்பட்ட மற்றும் தனிப்பட்ட முறையிலான ஆண் பணியாளர்களோடு நடத்தப்பட்ட உரையாடல்களின் பதிவுகளும், அவளுடைய மாமியாருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் உடன் பணியாற்றுவர்களுக்கும் பெயர் இல்லாமல் அவள் முறைகேடான பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளார் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்ற வகையில் அனுப்பி வைக்கப்பட்டன.

அவமானப்பட்டும் மனதளவில் அலைக்கழிக்கப் பட்டவரான நயன்தாரா அர்க்கஷா நகர சைபர் குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் ஷாம்பாலா தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2008 இன் படி புகார் ஒன்றைப் பதிவு செய்தார். சைபர் குற்றப் பிரிவினர் மேற்கொண்ட முதல் நிலைப் புலனாய்வில் நயன்தாராவின் அலைபேசி 2023 ஜனவரியில் இருந்து இன்விசி ட்ரக் என்னும் பெயரிலான “ஸ்பை வேருடன்” இணைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தது. இது அவரது செய்திகள், மின்னஞ்சல்கள், அவருக்கு வரும் அழைப்புகள், அவர் இருக்கும் இடம் ஆகிய அனைத்தையும் உடனுக்கு உடனே கவனிப்பதற்கு ஏதுவாக அமைந்தது.

இந்தப் போலியான இன்ஸ்டாகிராம் கணக்கைத் தொடங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட IP முகவரிகள் மற்றும் அவதூறான செய்திகளை உள்ளீடு செய்கின்ற ஆகிய அனைத்தும் அத்வைதின் அலுவலகமான ஓரியன் தொழில்நுட்ப அலுவலகத்தில் இருக்கும் கணிப்பொறியில் இருந்து நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டது.

நயன்தாராவின் தடயவியல் அறிக்கைகள் அவளுடைய வீட்டு இணைய இணைப்பானது அத்வைதின் அலுவலக லேப்டாப்பில் இருக்கும் ஸ்பை வேருடன் (spyware) ஒவ்வொரு நாளும் இணைக்கப்பட்டு இருந்ததை வெளிப்படுத்தியது.

அத்வைதிடம் இதை எதிர்த்துக் கேட்டபோது, இதுவும் அவன் பெயரைக் கெடுப்பதற்கு நயன்தாராவால் நடத்தப்பட்ட மற்றொரு பெண்ணிய நாடகம் என்று கூறி,இதில் தனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுதலித்தார்.

மேலும் அந்த ஐபி முகவரிகள் ஏமாற்று வேலையாக இருக்கக்கூடும். நூற்றுக்கணக்கான பணியாளர்கள் இருக்கும் ஒரு நிறுவனத்தில் ஒருவரைத் தேடிக் கண்டுபிடிப்பது அரைகுறை ஒன்றாக இருக்குமே தவிர முழுமையானதாக இருக்காது. மேலும், ஸ்பைவேர் நிறுவுவதற்கான தொழில்நுட்ப அறிவும் தனக்கு இல்லை என்று வாதிட்டார், மேலும் நயன்தாரா மனச்சம நிலை இல்லாமல் உள்ளார். மனப்பிறழ்வு நோயாளும் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் ஆரியாவை வளர்ப்பதற்குத் தகுதியற்றவர் என்றும் உறுதியாகக் கூறினார். நயன்தாரா ஆரியாவின் தேவைகளைப் புறக்கணித்து அவருடைய விரிவுரைகளிலும் கருத்தரங்களிலும் கலந்து கொள்வதற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார். குழந்தையையும் குடும்ப வேலைகளையும் நீண்டநேரமாக கவனிக்காமல் செல்கிறார்.

ஏமாற்றத்தால் மனதளவில் பாதிக்கப்பட்ட நயன்தாரா, ஷாம்பாலா இந்துத் திருமண சட்டம், 1955இன் பிரிவு 13(1) (ia)படி தான் மனதளவில் கொடுமை படுத்தப்பட்டதைக் காரணம் காட்டி, மண முறிவுக்கு வழக்குப் பதிவு செய்து, ஷாம்பாலா பாதுகாவலர் மற்றும் குழந்தைகள் சட்டம், 1899 இன் படி ஆரியாவின் முழுப் பராமரிப்பையும் மற்றும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்கள் பாதுகாப்பு சட்டம், 2005-ல் படி பாதுகாப்பு உரிமைகள், வசிப்பிட உரிமைகள், இழப்பீட்டுக்கான ஆணைகளை வேண்டினார். மேலும் அவர் ஷாம்பாலா தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2008இன் பிரிவு 66E (அந்தரங்க உரிமை அத்துமீறல்), பிரிவு 67 (ஆபாசமான கருத்துக்களை வெளியிடுதல்)

மற்றும் பிரிவு 72 (இரகசிய நம்பிக்கை மீறுகை) படி குற்றவியல் நடவடிக்கையைத் தொடர்ந்தார். இத்துடன் ஷாம்பாலா தண்டனைத் தொகுப்பு சட்டம் 1860 இல் பிரிவு 499, 500 மற்றும் 56இன் படி அவதூறு மட்டும் குற்றச்செயல் தூண்டுதலுக்கான குற்றச்சாட்டுகளையும் தொடர்ந்தார்.

குடும்ப நீதிமன்றம் குழந்தைக்குத் தேவையான தாயின் பராமரிப்பைக் கவனத்தில் கொண்டு, நயன்தாராவுக்கு ஆரியாவைக் கவனித்துக் கொள்வதற்கான இடைக்கால பாதுகாப்பை வழங்கியது. அத்துடன் அடுத்தடுத்த வார இறுதி நாட்களில் குழந்தையைப் பார்ப்பதற்கான உரிமையை அத்வைதுக்கு வழங்கியது. சைபர் குற்றவியல் பிரிவு தொழில்நுட்பச் சட்டம் மற்றும் தண்டனைத் தொகுப்பு சட்டத்தின் வகையியங்களின் படி அத்வைத்திற்கு எதிராகக் குற்றச்சாட்டைப் பதிவு செய்தது. நீதிமன்ற நடவடிக்கை இவ்வாறு சென்று கொண்டிருக்கும்போது, 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் முது முனைவர் ஆய்வுப் பட்டத்தை மேற்கொள்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கிற நியூ செவ்விள்ளி பல்கலைக்கழகத்தில் மதிப்பு மிகுந்த ஆய்வுத் திட்டத்தைத் பெற்றார். குடும்ப நீதிமன்றத்தில் ஒரு அவசர மனுவைக் கொடுத்தார். அதில் தன்னோடு ஆர்யாவை ஐக்கிய நாடுகளுக்குக் கொண்டு செல்வதற்கான அனுமதியை வேண்டினார். நயன்தாராவின் ஆய்வு திட்டமானது, ஆர்யாவின் எதிர்கால சிறப்புகளுக்கும், கல்வி, சுற்றுச்சூழல் சமுதாய பொருளாதார நிலைப்பாட்டையும் நிரந்தர தன்மையையும் உயர்த்தும் வகையிலும் இருக்கும் என்றும் தன் வாதத்தில் தெரிவித்தார்.

ஆர்யாவின் இடப்பெயர்வை அத்வைத் கடுமையாக எதிர்த்தார். ஆர்யா கூட்டுப்பாதுகாப்பில் விடப்பட வேண்டும் என்று வழக்குத் தொடுத்தார். ஆர்யாவின் இடப் பெயர்வானது அவளது உளவியல் வளர்ச்சியை சேதப்படுத்தி அவளது பண்பாட்டு வேர்களில் இருந்தும் பெற்றோர் வழிக் குடும்பத்தில் இருந்தும் அவளை அயன்மைப்படுத்திவிடும் என்று வாதிட்டார். நயன்தாராவின் தொழில் முறைப் பயணமானது ஆர்யாவின் இடப்பெயர்வுக்கு வழி செய்வதுடன், தந்தை வழி உறவை முற்றிலுமாக

முறித்து விடும் என்றும், அது அவளது ஒரு சமன்மையான வளர்ச்சியை இழக்கச் செய்யும் என்றும் வாதிட்டார்.

குடும்ப நல நீதிமன்றம் இடப்பெயர்வு மனுவின் மீது தனது தீர்ப்பினை ஒத்தி வைத்தது. உச்சநீதிமன்றமும் மனவிலக்கு, குழந்தை பாதுகாப்பு சைபர் குற்ற விசாரணை, கோரிய நயன்தாராவின் மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக் கொண்டது.

**கருத்தில் கொள்ள வேண்டிய வினாக்கள் (Issues for Consideration)**

1. நயன்தாரா, ஷாம்பாலா இந்து திருமணச் சட்டம் 1955இன் பிரிவு 13(1)(ia) அடிப்படையில், அத்வைதின் சைபர் பின்தொடர்தல், அவதூறு, மற்றும் மன உளைச்சல் போன்ற குற்றச்சாட்டுகளை கருத்தில் கொண்டு, 'கொடுமை' காரணத்தின்படி விவாகரத்துக்கான உரிமை பெற்றவரா?

2. அத்வைதின் செயல்கள், ஷாம்பாலா தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2008 (பிரிவுகள் 66E, 67, மற்றும் 72) மற்றும் குற்றச் சட்டம் 1860 (பிரிவுகள் 499, 500, மற்றும் 506) குற்றங்களாக அமையுமா?

3. அத்வைதின் அலுவலகக் கணினி அமைப்பிலிருந்து பெறப்பட்ட மின்னணு பதிவுகள், ஷாம்பாலா சான்றுச் சட்டம், 1872இன் பிரிவு 65B அடிப்படையில் சான்றாக ஏற்கத்தக்கவையா?

4. நயன்தாரா, ஆர்யாவுடன் அமெரிக்காவிற்கு திருப்பிச் செல்ல முனைவது, ஷாம்பாலா பாதுகாவலர் மற்றும் குழந்தைகள் சட்டம் 1890 இன் பிரிவு 7 அடிப்படையில், குழந்தையின் நலன் மற்றும் சிறந்த நலப்புரிதலுக்கு உகந்ததா? மேலும், அத்வைத்திற்கு இணை காவல் உரிமை அல்லது அந்த இடம்பெயர்வைத் தடுக்க உரிமையுண்டா? இதற்கிடையில், ஷாம்பாலா அரசியல் சட்டம் பிரிவு 21 வழங்கும் தனியுரிமை கருத்தில் கொள்ளப்பட வேண்டுமா?

**SURANA & SURANA AND VINAYAKA MISSION'S LAW SCHOOL**
**STATE LEVEL TAMIL FAMILY & CYBER LAW**
**MOOT COURT COMPETITION 2025-26**

**FAMILY & CYBER LAW - MOOT PROPOSITION**

**In the Supreme Court of Shambala**

Nayantara

vs.

Advait & State of Shambala

**Proposition**

Nayantara Rao was born in 1995 in Arkasha Nagar, a thriving metropolitan area in the State of Shambala. From an early age, she excelled in academics, securing gold medals in sociology and obtaining her MPhil from Shambala National University. Her professional dedication saw her appointed as an Assistant Professor in the Department of Sociology at her alma mater by 2018.

During her postgraduate studies in 2013, Nayantara met Advait Sharma, then pursuing his Master's in Computer Applications. Their intellectual compatibility grew into a romantic relationship that culminated in marriage on June 20, 2018, under the Shambala Special Marriages Act, 1976. Their wedding was a modest function attended by immediate family and close friends at the Arkasha Nagar Registrar's office. Post-marriage, they moved into a rented apartment in Prabhat Colony, Arkasha Nagar.

Initially, their married life was harmonious. Nayantara continued her lectureship, inspiring undergraduate and master's students with her feminist research projects, while Advait was working as a software engineer at Orion Tech Systems Pvt Ltd, earning significant increments every appraisal cycle. Their social media presence projected an image of an aspirational millennial couple balancing careers and relationship goals.

In January 2020, Advait's father passed away due to a cardiac arrest. This loss deeply affected Advait's mother, Meera Sharma, who began spending extended periods with them. By June 2020, she permanently shifted to their apartment. With the COVID-19 lockdown and work-from-home culture intensifying domestic proximity, cracks began emerging in Nayantara and Advait's relationship. Advait began accusing Nayantara of neglecting household duties, criticising her focus on academic conferences and research publications. Nayantara often returned late from department meetings, resulting in arguments escalating over trivial domestic chores and responsibilities.

Despite their differences, in December 2022, Nayantara conceived and gave birth to a daughter, Arya, in March 2023. The birth brought temporary reconciliation, with both sides celebrating Arya's arrival. However, within three months, conflicts resumed when Advait insisted Nayantara resign from her teaching post to care for Arya full-time. Nayantara refused, citing her professional passion and financial independence as essential to her identity. Advait's mother reinforced his demands, stating that Nayantara was 'selfish' and 'career-obsessed,' unfit to raise a child in a traditional Shambala household.

Tensions escalated when Nayantara began receiving strange calls and messages in June 2023. Friends, colleagues, and extended relatives contacted her, expressing concern over obscene posts appearing on a social media account bearing her name. Nayantara was shocked to discover an Instagram handle titled **'NayaRaoSecretLife'**, displaying semi-nude photos of women (none of which were hers) but captioned with her full name, professional designation, and offensive remarks implying she was engaged in prostitution and extramarital affairs. Further, screenshots of private academic WhatsApp conversations with male colleagues discussing upcoming seminars were sent anonymously to her in-laws and select faculty, insinuating she was involved in immoral relationships.

Humiliated and mentally devastated, Nayantara approached the Arkasha Nagar Cyber Crime Police Station, filing a complaint under the Shambala Information Technology Act, 2008. Preliminary investigation by the Cyber Crime Cell revealed that her mobile phone was embedded with spyware called **'InvisiTrack'** since January 2023, which enabled real-time monitoring of her messages, emails, calls, and location. The IP addresses used for creating the fake Instagram account and uploading the defamatory content were traced to Advait's

office system at Orion Tech Systems. Nayantara's forensic report indicated daily spyware updates from Advait's official laptop linked to their home Wi-Fi.

When confronted, Advait denied any involvement, dismissing the allegations as 'another feminist drama' to defame him. He argued that IP addresses could be spoofed, and hundreds of employees worked at Orion Tech, making such tracing inconclusive. Advait claimed he lacked technical knowledge to install spyware and asserted that Nayantara was mentally unstable, driven by paranoia, and unfit to raise Arya. He contended that Nayantara neglected Arya's needs, prioritising her lectures and conferences, often leaving the infant with domestic help for long hours.

Traumatised by the betrayal, Nayantara filed for **divorce** under Section 13(1)(ia) of the Shambala Hindu Marriage Act, 1955, on grounds of mental cruelty, seeking sole custody of Arya under the Shambala Guardians and Wards Act, 1890, and protection orders, residence rights, and compensation under the Protection of Women from Domestic Violence Act, 2005. She also pursued criminal proceedings under Sections 66E (violation of privacy), 67 (publishing obscene content), and 72 (breach of confidentiality) of the Shambala Information Technology Act, 2008, alongside defamation and criminal intimidation charges under Sections 499, 500, and 506 of the Shambala Penal Code, 1860.

The Family Court granted Nayantara **interim custody** of Arya, recognising the child's need for maternal care, with visitation rights granted to Advait on alternate weekends. Meanwhile, the Cyber Crime Cell filed a charge sheet against Advait under the IT Act and IPC provisions. During these proceedings, Nayantara secured a prestigious **postdoctoral fellowship at the University of New Seville, United States**, to begin in January 2024. She filed an urgent petition before the Family Court seeking permission to relocate to the US with Arya, arguing that her fellowship would enhance Arya's future prospects, educational environment, and socio-economic stability.

Advait strongly opposed the relocation, filing for **joint custody**, claiming Arya would be alienated from her cultural roots and paternal family, damaging her psychological development. He argued that the relocation was Nayantara's ploy to sever his parental bond with Arya permanently, depriving her of a balanced upbringing.

The Family Court reserved orders on the relocation petition, while the Supreme Court of Shambala admitted Nayantara's appeal for divorce, child custody, and cybercrime adjudication, tagging all matters for consolidated hearing given their intertwined factual matrix.

**Issues for Consideration**

1. Whether Nayantara is entitled to divorce on the ground of cruelty under Section 13(1)(ia) of the Shambala Hindu Marriage Act, 1955, in light of Advait's alleged acts of cyber stalking, defamation and mental harassment?
2. Whether Advait's actions constitute offences under the Shambala Information Technology Act, 2008 (Sections 66E, 67, and 72) and the Shambala Penal Code, 1860 (Sections 499, 500, and 506)?
3. Whether electronic evidence obtained from Advait's office systems are admissible as evidence under Section 65B of the Shambala Evidence Act, 1872?
4. Whether Nayantara's proposed relocation to the United States with Arya serves the best interest and welfare of the child under Section 7 of the Shambala Guardians and Wards Act, 1890, and whether Advait is entitled to joint custody or to restrain such relocation, keeping in view of the constitutional right to privacy under Article 21 of the Shambala Constitution?